**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 26**
**Defence**
**Court**

Name : மாலதி

Father's/Husband Name : சேகர்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 10.05.2022

**முதல் விசாரணை**:

என் பெயர் மாலதி. நான் தற்போது தென்காசியில் மலையான் தெருவில் குடியிருக்கிறேன். எனது கணவர் பெயர் சேகர். எனது கணவர் இறந்துபோனார். எனது கணவர் யாரோ வெட்டிவிட்டதாக சொன்னார்கள் அதனால் அவர் இறந்துபோனார். என் கணவருடன் உடன் பிறந்தவர்கள் குமார் பாண்டியன், சக்தி

பாண்டியன், திருப்பதி, சுரேஷ், செந்தில், ரவிபாண்டியன், மற்றும் எனது கணவர் சேகர் ஆவார். எனது கணவர் சேகர், செந்தில், சுரேஷ், குமார் பாண்டியன் ஆகியோர் இறந்துபோனார்கள். இந்த நால்வரும் கொலை செய்யப்பட்டு இறந்ததாக கேள்விப்பட்டேன். எதிரிகள் யாரையும் தெரியாது. முதலில் குமார் பாண்டியன் இறந்துபோனார். பின்னர் எனது கணவர் இறந்துபோனார். எனது கணவர் மலையான் தெருவில் இருந்து திருநெல்வேலி மதுரை சாலை இணையும் இடத்தில் முத்தாரம்மன் கோவில் அருகே எனது கணவர் இறந்துபோனதாக கேள்வி பட்டேன். எனது கணவரை தென்காசி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். அப்போது அவர் இறந்துகிடந்தார். அவரை அடையாளம் நான் காண்பித்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**